U.S. Consulate General Chennai

PRESS RELEASE

220 Anna Salai, Gemini Circle, Chennai 600006
Phone: +914428574181; https://in.usembassy.gov/embassy-consulates/chennai/;
facebook.com/chennai.usconsulate; twitter.com/USAndChennai; Youtube.com/user/AmConGenChennai

டிசம்பர் 12, 2018

# கார் விற்பனை என்ற பெயரில் மோசடி: பொதுமக்களை எச்சரிக்கிறது அமெரிக்கத் துணைத் தூதரகம்

சென்னை: சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் பொது மக்கள் ஒரு மோசடியில் சிக்காமலிருக்க எச்சரிக்க விரும்புகிறது. அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் வாகனங்கள் விற்பனைக்கு வருவதாக இணையவழி விளம்பரங்களைத் தவறாக வெளியிடும் மோசடிதான் அது. கடந்த நான்கு மாதங்களில் ஐந்து பேர் இப்படிப்பட்ட விளம்பரங்களை நம்பி 30,000 ரூபாய் வரை கட்டி ஏமாற்றம் அடைந்ததாக நாங்கள் அறிகிறோம். இது பற்றி காவல் துறையிடம் தெரிவித்திருக்கிறோம்.

அமெரிக்கத் துணைத் தூதரகம் இணையவழி விளம்பரம் மூலமாக வாகனங்களை விற்பனை செய்வதில்லை. அவ்வாறு ஏதேனும் விளம்பரம் வெளியானால், உண்மைதானா என்று உறுதி செய்ய, தூதரகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

இத்தகைய மோசடிகளிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

- முன்பணம் ஏதும் செலுத்துவதற்கு முன்னால், விற்பனையாளரை நேரடியாக சந்தித்து வாகனங்களைப் பார்வையிடுங்கள்.
- இணையவழி அல்லது பரிசு அட்டை வழி பணப் பரிவர்த்தனை போன்ற மாற்றுவழி பணம் செலுத்தும் முறை குறித்து விழிப்புணர்வுடன் இருங்கள்.
- ஒருவேளை நீங்கள் ஏமாற்றப்பட்டிருந்தால், அருகிலுள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

***